DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 209/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : கள்ளகொண்டான் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th **October2025.**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**நீதிமன்ற முதல்விசாரணை:**

நான் தற்போது மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். அ.சா.1 கவிதாவை எனக்கு தெரியும். நான் ஊர் நாட்டாமையாக இருந்ததால் அவர்களை எனக்கு தெரியும். 2010ம் வருடம் நான் ஊர் நாட்டாமையாக இருந்தபோது கவிதாவும், கவிதாவின் குடும்பத்தினரும் பஞ்சாயத்தினருக்கு வந்திருந்தனர். கவிதாவின் தந்தை கொத்தாளமுத்து கருப்பசாமி தனது மகளின் கழுத்தில் கயிறை போட்டுவிட்டதாக கூறிக்கொண்டு பஞ்சாயத்திற்கு வந்தார். கவிதாவின் கழுத்தில் கயிறு தடம் தெரிந்தது. நாங்கள் ஊர் பஞ்சாயத்தில் பேசினோம். அந்த பஞ்சாயத்தில் கருப்பசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தை கவிதாவின் மகன் பெயருக்கு எழுதிக்கொடுக்குமாறு முடிவு செய்து தெரிவித்தோம். பஞ்சாயத்து

முடிந்து அவர்களை அனுப்பிவிட்டோம். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

கவிதாவின் அப்பா மற்றும் அம்மா திருப்பூரில்தான் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான். கவிதா திருமணத்திற்கு பிறகு திருப்பூரில் இருந்தார் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய பஞ்சாயத்திற்கு வந்த பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கவிதாவின் கழுத்தில் கயிறு தடம் யாரால் ஏற்படுத்தப்பட்டதுஎன்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் இவ்வழக்கு சம்பவம் சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 209/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : தங்கதுரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th **October2025.**

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**நீதிமன்ற முதல்விசாரணை:**

நான் தற்போது மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். அ.சா.1 கவிதாவை எனக்கு தெரியும். அ.சா.2 யை தெரியும். அ.சா.2 எங்கள் ஊர் நாட்டாமை. 1ம் எதிரி கருப்பசாமி எனது தங்கை மகன். அ.சா.1 கவிதா எனது தம்பி மகள். 2006ம் வருடம் கவிதாவிற்கும், கருப்பசாமிக்கும் திருமணம் நடந்தது. திருமணம் நடந்து 3 வருடங்கள் கழித்து ஒரு நாள் கவிதாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்று தளவாய்புரத்தில் இருந்த என்னை 1ம் எதிரி அழைத்தார். கவிதாவிற்கு கழுத்தில் கயிறு போட்டு இறுக்கப்பட்டிருந்தது. கவிதாவின் கண்கள் ரத்தமாக இருந்தன. ராஜபாளையம் பஸ்ஸ்டாண்டுக்கு கீழ்புறம் உள்ள மருத்துவமனையில்

கவிதாவை சேர்த்துவிட்டு கவிதாவின் அம்மா வரும்வரை மருத்துவமனையில் நான் இருந்தேன். கவிதாவை அவரது அம்மாவிடம் ஒப்படைத்துவிட்டு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

கவிதாவிற்கு திருமணம் ஆகும் முன்பு கவிதாவும் அவரது குடும்பத்தினரும் திருப்பூரில் குடியிருந்து வந்தனர் என்றால் சரிதான். திருப்பூரில் கவிதாவின் தந்தை டெய்லர் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். திருமணம் ஆனபிறகு கருப்பசாமி கவிதாவின் குடும்பத்தினருடன் திருப்பூரில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். சிலகாலம் திருப்பூரில் இருந்தார். அதன்பிறகு அவர்கள் ஊருக்கு வந்தனர். கவிதா, கவிதாவின் தந்தை மற்றும் கருப்பசாமி ஆகியோர்களுக்கு இடையில் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கவிதாவிற்கு வேறொரு நபருடன் தொடர்பு உள்ளது என பிரச்சனை ஏற்பட்டு கவிதாவும் கருப்பசாமியும் பிரிந்திருந்தனர் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்து சில மாதங்களில் கவிதா வேறொரு நபருடன் தொடர்பில் இருந்தார் என்று பிரச்சனை ஏற்பட்டு 1ம் எதிரி கவிதாவிற்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து கவிதாவிடமிருந்து 1ம் எதிரி பிரிந்து வாழ்ந்தார் என்றால் சரியல்ல. கவிதா 1ம் எதிரியிடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டாரா என்றால் இல்லை. கவிதா வேறொரு நபரை திருமணம் செய்துகொண்டு தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.1 எனது தம்பி மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மை சம்பவங்களை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும், எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**